Registered as a Newspaper

பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 22 சனிக்கிழமை (08.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 282

# பரந்த அடிப்படையிலான தீர்வொன்றை முன்வைக்க இந்தியாவுக்கு உறுதிமொழி

## புதுடில்லிப் பேச்சுக்களின்போது நேரில் தெரிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 08

பரந்த - பல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய - அம்சங்கள் அடங்கிய தீர்வுத் திட்ட யோசனையை இலங்கை அரசு மிக விரைவில் முன்வைக்கும்.

- இத்தகைய உறுதிமொழி ஒன்றை இலங்கை அரசுத் தலைமை இந்திய அரசுக்கு வழங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது. இலங்கையின் உயர்மட்டக்குழு கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் புதுடில்லியில் நடத்திய பேச்சுகளின்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணெய் அகழ்வு: அமைச்சர்கள் குழு இங்கிலாந்து பயணம்

இலங்கையில் எண்ணெய் அகழ்விற்கு சர்வதேச முதலீட்டாளர்களை உள்வாங்கும் வேலைத்திட்டம் தொடர்பாக இன்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் கனியவள அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி உட்பட உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று இங்கிலாந்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலையில் மோதல்

கொழும்பு, செப். 8

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களுக்கிடையில் நேற்றுக்காலை மோதல் ஒன்று இடம்பெற்றிருக்கின்றது.

காலை 8.30 மணியளவில் ஆரம்பமான இந்த மோதலில் இரு குழுக்களுக்கிடையில் பரஸ்பரம் கல் எறிதல் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தின் பின்னர் பொலிஸார் உடன் விரைந்துவந்து மோதலைத் தடுத்து நிறுத்தினர்

- என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### முள்ளிக்குளத்தில் ஒரு வாரம் சிக்குண்டிருந்த மக்கள்

## பட்டினியோடு 12 மைல்கள் நடந்து வந்து சோர்வுற்ற நிலையில் சிலாவத்துறை சேர்ந்தனர்!

மன்னார், செப். 8

கடந்த ஒரு வார காலமாக, முள்ளிக் குளத்தில் சிக்குண்டு இருந்த சிறுவர்களும் முதியவர்களும் ஆண்களும் பெண்களுமாகச் சுமார் 600 பொது மக்கள், 12 மைல் தூரத்தை நடந்து வந்து, நேற்று ஒருவாறு சிலாவத்துறையை அடைந்தனர்.

சுமார் நான்கு நாள்களாக போதிய உணவின்றி, அரைப்பட்டினி, காற்பட்டினியாக இருந்த இந்த மக்கள், சிலாவத்துறை வந்து சேர்ந்தபோது, களைப்புற்று, சோர்ந்து பேசமுடியாது, இயங்க முடியாத மிகவும் பரிதாபகரமான நிலையில் காணப்பட்டனர்.

இவர்களில் சிறுவர்கள், முதியவர்கள் வயிற்றோட்ட நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு தினங்களாக எமது கிராமத்துக்கு உணவுப் பொருள்கள் எதுவும் வந்துசேரவில்லை. கையிருப்பில் இருந்த பொருள்கள் இரண்டொரு நாள்களில் குறைந்தும், தீர்ந்தும் போயின. பலரும் அரைப்பட்டினி இருந்தோம் - என்று அவர்கள் தெரிவித்தனர்.

இன்று (வெள்ளிக்கிழமை) எம்மை மீட்க நடவடிக்கை எடுத்திருக்காவிடில், நாம் பட்டினிச் சாவுக்கு ஆளாக நேரிட்டிருக்கும் என்றும் அவர்களில் பலரும் அழுதழுது கூறினர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டவர்களோ, காணாமற் போனவர்களோ பூஸா தடுப்பு முகாமில் இல்லையென அறிவிப்பு!

கொழும்பு, செப். 8

காலி மாவட்டத்திலுள்ள பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் கடத்தப்பட்டவர்களோ அல்லது கடத்தப்பட்டு பின் காணாமல் போனவர்களோ இருக்கவில்லை. அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வாக்குமூலங்களின் பிரகாரம் உண்மை நிலை அறியப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட காணாமல் போதல் மற்றும் ஆள்கடத்தல் தொடர்பான விவகாரங்களைக் கண்காணிக்கும் விசேட உயர்மட்டக் குழுவினர் தெரிவித்தனர்.

நேற்று பூஸா முகாமுக்கு விஜயம் செய்த அவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடினர். இதன் போதே இந்தத் தகவல் பெறப்பட்டது

- என தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதி அமைச்சர்களான பெ.இராதாகிருஷ்ணன், ஏ.ஏ.பாயிஸ் மற்றும் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் அபயவர்த்தன ஆகியோரே அங்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்தக் குழுவினர் சுமார் 500 கைதிகளைச் சந்தித்து விவரங்களைக் கேட்டறிந்தனர் என்றும்-

சாதாரணமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களே இங்குள்ளனர் - என்றும் தெரிவித்த அவர்கள் -

இவர்களது விடுதலை தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக்கொண்டு வரப்படும்

-எனவும் தெரிவித்தனர். (சி)

### குடாநாட்டுக்குப் படகுகள் மூலம் உணவுப் பொருள்:

## மக்கள் ஆதரவு திரட்டுவதற்கு தமிழக நகரங்களில் பரப்புரைகள்

சென்னை, செப். 8

யாழ்ப்பாணத்துக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை படகுமூலம் எடுத்துச் செல்ல மேற்கொண்டுள்ள முயற்சி குறித்து, தமிழகத்தில் பல நகரங்களிலும் கலை நிகழ்ச்சிகளுடன் பரப்புரைகள் நேற்று இடம்பெற்றன.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பரப்புரைகளில் பெரும் எண்ணிக்கையில் இயக்கத்தின் தொண்டர்கள் பங்கேற்றனர்.

தாம் எடுத்துள்ள முன்முயற்சி குறித்து மக்களுக்கு விளக்கமளித்து அதன்மூலம் அவர்களின் ஆதரவைப் பெறும் நோக்கில் இந்தப் பரப்புரைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஈழத் தமிழர்களின் அவலங்களை வெளிப்படுத்தும் தெருநாடகங்களும் இந்த பரப்புரையின் போது நடித்துக் காட்டப்படுகின்றன.

இந்தப் பரப்புரைகளுக்கும் நெடுமாறனின் யாழ்ப்பாணத்துக்கு உணவு அனுப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## அமுக்க வெடியில் சிக்கி டிராக்டர் சிதறியது 3 சிவிலியன்கள் அந்த இடத்திலேயே பலி!

### வந்தாறுமூலையில் நேற்றுக்காலை பயங்கரம்

ஏறாவூர், செப். 8

ஏறாவூர், பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வந்தாறுமூலை, உப்போடை வீதியில் உழவு இயந்திரம் (டிராக்டர்) ஒன்று அமுக்க வெடியில் சிக்கியதில் அதில் பயணஞ்செய்த மூன்று சிவிலியன்கள் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஈரளக்குளம் பகுதியைச் சேர்ந்த கதிர்காமர் நவராசா (வயது - 40), வந்தாறுமூலையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை வேலுப்பிள்ளை (வயது - 41) மற்றும் தங்கராசா குகன் (வயது - 17) ஆகிய மூன்று பேரே இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் மூன்று பேரும் மண் ஏற்றி வருவதற்காக டிரக்டர் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது டிராக்டர் அமுக்க வெடியில் சிக்குண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்க வெடியே வெடித்திருக்கின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

### உயர்தர விடைத்தாள் திருத்தும் பணி

## 13ஆம் திகதி ஆரம்பமாகும் என அரசு அறிவிப்பு; பகிஷ்கரிப்புத் தொடரும் என்கிறது தொழிற்சங்கம்

கொழும்பு, செப். 8

ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சை விடைத்தாள் மதிப்பிடும் பணி எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகும் என அரசு அறிவித்துள்ளது.

எனினும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்ந்து நடைபெறம் என இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பகிஷ்கரிப்பால் பாதிக்கப்பட்டிருந்த விடைத்தாள் திருத்தும் பணி எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜோசப் ஸ்ராலினிடம் கேட்டபோது -

சம்பள நிர்ணயக் குழுவுடன் நேற்றும் பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்களி

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Organ / Violin Notes** Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான, 260 சினிமாப் பாடல்களின் இசைக் குறிப்புகளும்; Organ வயலின், Guitar ஆகியவையும் விற்பனைக்குண்டு.
புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.
கரவீணா இசை மன்றம், 75, கோயில் வீதி, நல்லூர்.
T..P:- 0713055991, 0777031293 (நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே) (64083)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இறதிமதி சுந்தரம்



உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை (கல்கந்தவத்தை) திருமதி இறதிமதி சுந்தரம் 06.09.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும் லோகநாதன் (ஆஸ்திரேலியா), ஜெகதீஸ்வரன்(ஆஸ்திரேலியா), நகுலேஸ்வரன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா), அனுஷா (கொழும்பு), கௌசலா (ஆஸ்திரேலியா), தயாநிதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் சற்குணேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவசோதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் மருமகளும் செல்வறஞ்சிதம், காயத்திரி, கலாதேவி, ஈஸ்வரி, முருகேசன் ஆகியோரின் மாமியாரும் மயூரன், கஜன், சுகாசினி, அருண், தேசான், பவித்திரா, கிருஜன், தக்சனா, பிரகாஸ் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல 06, Albert Place, தெகிவளை என்ற முகவரியில் நடைபெற்று, பூதவுடல் பொறளை கனத்தை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு.ஜெகதீஸ்வரன் (மகன்)
0777563946, 0112727218.

(சி/53595 )

## சின்னத்தம்பி துரைசிங்கம்



அளவெட்டி மத்தி, அம்பத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைசிங்கம் நேற்று (07.08.2007) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராஜகுலசிங்கம், தருமகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னபாக்கியம், கலைவாணி, செல்வக்குமார் (சைவப்பிரகாச வித்தியாலயம் - தெல்லிப்பழை) ஆகியோரின் மைத்துனரும் தயாளன், தயாபரன், தர்சினி, தமிழினி, மாதங்கி ஆகியோரின் சிறிய தந்தையும் றொசானி, ஜெயானந்தன், தேவதாஸ் ஆகியோரின் மாமனாரும், மா. பகவதிப்பிள்ளையின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2007) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி. (64633)

தகவல்:
சி. இராசகுலசிங்கம் (குலம்).

## கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம் (பாலன்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கரம்பொன், ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம் நேற்று (07.09.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பார்வதியின் அன்புக் கணவரும், பாமினி, சுபோதினி, சசிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதியழகன், நகுலேஸ்வரகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் விதுஷனாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
இல.6, செட்டித்தெரு, நல்லூர். (64630)

தகவல்:
குடும்பத்தினர்.

## வைத்திலிங்கம் குலரட்ணம்

(முன்னாள் கொழும்பு Free Lanka Motors உரிமையாளரும் தற்போதைய யாழ். IIS Office Automation முகாமையாளரும்)



கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் குலரட்ணம் 04.09.2007 செவ்வாய்க் கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி - ரட்னேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், லலிதாவின் அன்புக் கணவரும், விக்னேஸ் (இயக்குநர், **IIS, Jaffna**), ரமேஸ் (இயக்குநர், **PC Paradise, Jaffna**), பிரகாஸ் (கணனி திட்டமுகாமையாளர், **Teranet Lanka, Colombo**) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசோதி (திட்டமுகாமையாளர்), மனோகரி, சுஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் அபிஷாயினி, சஹானா, தக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ரவீந்திரன் (**UK**), தவராசா (**Canada**), புஸ்பராணி (**UK**) ஆகியோரின் மைத்துனரும் சுசி (**UK**), கௌசல்யா (**Canada**), முத்துவேல்ராஜ© (**UK**) ஆகியோரின் சகலனும் பரமேஸ்வரி, மனோன்மணி,பராசக்தி, மகேந்திரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் பூரணமாவின் பாசமிகு பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2007) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

273/11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4590190 (சி-53605)

தகவல்:
மனைவி, மகன்மார்.

# நிறைவேற்றப்பட்டவை என அறிவிக்கப்பட்ட நிதிச் சட்டங்களை எதிர்க்க ஜே.வி.பி. முடிவு

கொழும்பு, செப். 8

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அரச தரப்பு உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் மாத்திரம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டவையாக அறிவிக்கப்பட்ட நிதித் திருத்தச் சட்டங்கள் சட்டவிரோதமானவை என்றும் அவற்றை ஒருபோதும் ஏற்கமுடியாது என்றும் ஜே.வி.பி. அறிவித்திருக்கிறது.

இந்த விடயங்கள் குறித்து கட்சியின் அரசியல் விவகாரக்குழுவின் கூட்டத்தைக் கூட்டி இச்சட்டங்களை எதிர்ப்பது தொடர்பாகவும் இவற்றின் தீங்குகளை மக்களுக்கு அறிவிப்பது தொடர்பாகவும் சில தீர்மானங்களை எடுக்க வுள்ளதாகவும் அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் ஜே.வி.பி. ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸ்ஸநாயக்க கூறியவை வருமாறு:-

நிதி இல்லாமல் கஷ்டப்படும் அரசு, மக்களிடமிருந்து நிதியைப் பறிக்கத் திட்டமிட்டு புதிய வரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வரிகளைச் சட்டபூர்வமாக்குவதற்காக நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட நிதித் திருத்தச் சட்டமூலங்களை எதிர்க்கட்சியினரின் பங்களிப்பில்லாமலே அரசு சட்டமாக்கியுள்ளது.

இச்சட்ட மூலங்களில் முதலாவதான 256ஆம் இலக்க நிதித்திருத்தச்சட்ட மூலத்தில் மேலும் திருத்தங்கள் கொண்டு வந்து நிறை வேற்றுவதென இணக்கம்காட்டப்பட்டிருந்தது.

கையடக்கத் தொலைபேசிப் பாவனைக் கட்டணத்தில் 7.5 வீத வரியையும் நிலையான கட்டணத்தில் 50 ரூபாவையும் சேர்ப்பதென்று முதலாவது நிதித் திருத்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### திருட்டுத்தனமாக நிறைவேற்றப்பட்டது

ஆனால், 7.5வீத வரியை 10 வீதமாக உயர்த்தி நிலை யான கட்டணத்துடன் இணைக்கப்படவிருந்த 50 ரூபா கட்டணத்தை முற்றாக நீக்கிய பின்பே அதைச் சட்டமாக்க வேண்டும் என்று பிறகு இணக்கம் காணப் பட்டது.

அவசர அவசரமாக இச் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டமையால் அத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டனவா, இல்லையா என்று யாருக்கும் தெரியவில்லை. எமக்கும் தெரியாது.

கூச்சல், குழப்பத்திற்கு மத்தியில் திருட்டுத்தனமாக அச்சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதை ஏற்கமுடியாது என்று நாம் சொன்னால், எடுத்த தீர்மானத்தை மாற்றமுடியாது என்கிறார் சபா நாயகர்.

என்ன தீர்மானம் எடுத்தீர்கள்? அச்சட்ட மூலங்களில் மாற்றங்கள் எதுவும் செய்யப்பட்டனவா? - என்று அவரைக் கேட்டால் பதில் சொல்ல முடியாமல் முழிக்கின்றார்.

இச்சட்டங்களில் என்ன உள்ளன என்று எவருக்கும் தெரியாது. சட்ட விரோதமான முறையில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டங்களை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விடவும் - ஜே.வி.பிக்குதான் மக்கள் அதிக வாக்குகளை அளித்தனர். எம்மக்களை எம்மால் ஏமாற்றமுடியாது.

இச்சட்டங்களை எதிர்ப்பதற்கும் மக்களுக்கு இது குறித்து விளக்கமளிப்பதற்கும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கட்சியின் அரசியல் குழு விரைவில் கூடித் தீர்மானிக்கும் - என்றார் அவர்.

(சி)

# மேர்வினின் மகன் மீண்டும் சிக்கலில்!

கொழும்பு,செப்.8

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனான மாலக சில்வாவினால் நையப்புடைக்கப்பட்டார் எனக் கூறப்படும் கணக்காளர் ஒருவர், படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

மேற்படி தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் இரவு பம்பலப்பிட்டி, டுப்ளிக்கேஷன் வீதியில் உள்ள கேளிக்கை விடுதி ஒன்றில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் சமிந்த சோனகசிங்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பு வரை சென்றதாம். இது தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தானும் தாக்குதலுக்கு உள்ளானார் எனவும் தனக்குக் காயம் ஏற்பட்டுள்ளது எனவும் மேர்வின் சில்வாவின் மகனும் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

மேர்வின் சில்வாவின் மகன் இவ்வாறு கேளிக்கை விடுதிகளில் வன்முறைக் கலாட்டாக்களில் சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்று செய்திகள் வெளிவருவது இது மூன்றாவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)


**ஆட்டோ விற்பனைக்கு**
GX xxxx என்னும் இலக்கமுடைய ஆட்டோ விற்பனைக்குண்டு. தனிப்பாவனையிலுள்ளது.
தொடர்புகளுக்கு
தாசன் பாம், 158/4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம் (64621)

**SRS ஏவியேசன்**
யாழ் - கொழும்பு - யாழ் விசேட பயணிகள் விமான சேவை. பாதுகாப்பு அனுமதி பெறவேண்டிய பொருள்களும் 3 நாள்களுக்குள் [MOD] பெற்று ஏற்றித்தரப்படும். கடுகதி கடிதப் பரிமாற்றங்களும் செய்யப்படும்.
தொடர்பு: 0212222874, 0214591045, 0602214607
0773412315, 0777733662 (64623)

**விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள புத்தம் புதிய பெரிய LG Fridge, TV Stand என்பன விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: [illegible]
(64620)

**Notice**
Mr. T. Balakumaran is no more in the service of the Sri Lanka Red Cross Society, Jaffna Branch. Please refrain from having any matters with him concerning this office.
Branch Exeutive Officer,
SLRCS, Jaffna Branch,
No, 73, Kandy Road,
Jaffna. (சி-53600)


# 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 17 • 07 • 1946



மறைவு 09 • 08 • 2007

## அமரர் சபாபதி பொன்னுச்சாமி

(அண்ணாத்துரை)

எத்தனை நாள்கள் கழிந்தாலும் என்றும்
உனது நினைவு
எங்களோடு சேர்ந்து கொண்டே போகும்

"தாய்வீடு"
கருணாநிதி ச.ச. நிலையம்,
வல்வெட்டி. (64625)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## செல்வி சங்கவி சத்திவடிவேல்

(தரம் - 1 யா/ இந்து ஆரம்பப் பாடசாலை)



இல. 55/64, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கவி சத்திவடிவேல் 06.09.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காளிகோயிலடி, களபூமி, காரைநகரைச் சேர்ந்த சத்திவடிவேல் - லலிதாதேவி தம்பதியரின் அன்பு மகளும், மயூரன் (வெல்டர்), சர்மிளா (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா, முதலாம் வருடம்), சுபிந்தன் (யா/ இந்துக் கல்லூரி, 2008ஆம் ஆண்டு கணிதப்பிரிவு), சோபிதா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைச்சாமி (அமரர்) - இராசம்மா (அமரர்) மற்றும் பொன்னம்பலம் - கனகபூரணம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2007) ஞாயிறுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

55/64, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி. (64629)

தகவல்:
து. நடராசா (ஆசாரி, பெரியப்பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பெரு விளையாட்டுகளில் பங்குபற்ற குடாநாட்டிலிருந்து 22பேர் இன்று பயணம்

யாழ்ப்பாணம், செப்.8

விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தேசிய மட்டப் பெருவிளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற குடாநாட்டிலிருந்து 22 வீர, வீராங்கனைகள் இன்று பயணமாகவுள் ளனர்.

மாத்தறையில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் வடமாகாண அணிகளில் பிரதி இந்த வீர, வீராங்கனைகள் இடம்பெறுவர்.

கூடைப்பந்தாட்ட அணியில் இ.யசோ, எ.விணோஜா, ப.கோபிகா, சி.ஜனனி, எம்.சிலோசனா, எம்.உஷாயினி, வி.சிவசூர்யாயினி ஆகிய வீராங்கனைகள் இடம்பெறுவர். இவர்களுக்கு விளையாட்டுப் பொறுப்பாளராக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ரி.ஆர்.மோகனதாஸ் செல்கிறார்.

கரப்பந்தாட்ட அணியில் கே.யசீதரன், வி.செந்தூரன், எஸ்.சிவாஸ்ரூடன், கே.எழில்காந், எஸ்.செல்வதரன், ரி.விணோஜன் ஆகியோர் இடம்பெறுவர். இவர்களுக்கு விளையாட்டுப் பொறுப்பாளராக வேலணை பிரதேச விளையாட்டு அதிகாரி எஸ்.நிர்மலநாயகம் செல்லவுள்ளார்.

வலைப்பந்தாட்ட அணியில் கே.மயூரி, ஆர்.மைதிலி, எம்.மேனகா, கே.நிலானி, எஸ்.திருமகள், எஸ்.வக்சலா, ரி.ஸ்ரீகாயத் திரி, எஸ்.நிலாந்தி, எஸ் பிறிண்டா ஆகிய வீராங்கனைகள் இடம்பெறுவர். இவர்களுக்கு விளையாட்டுப் பொறுப்பாளராக யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் திருமதி ஏ.ஜே.ரூபசிங்கம் செல்லவுள்ளார். (202)



உலக உணவு நிறுவனம் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் புதிதாக அமைத்துக் கொடுத்த சமயல் கூட திறப்பு விழாவில் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மார்க் அரோயா மங்கள விளக்கேற்றுவதையும் அதிபர் இ.ராகனவன் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (160)

# குடாநாட்டில் கைத்தொலைபேசி இணைப்புகள் அடிக்கடி செயலிழப்பு: பாவனையாளர் சிரமம்

யாழ்ப்பாணம், செப்.8

குடாநாட்டில் அண்மைக் காலமாக கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் அடிக்கடி செயலிழக்கின்றன. இதனால் தொலைபேசிப் பாவனையாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

இங்கு இரண்டு கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள் சேவையாற்றி வருகின்றன. இந்த சேவைகள் இரண்டும் அடிக்கடி தடைப்படுகின்றன. சேவை செயலிழந்து பலமணி நேரங்களின் பின்பே மீண்டும் வருகின்றது.

இதனால் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் தமது அவசரத் தேவைகளின்போது தொலைபேசிகளைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் கைத்தொலை பேசிச் சேவைகள் செயலிழப்பதால் அவசர அழைப்புகளை மேற்கொள்ள முடியாதுள்ள தாகக் குறிப்பிடுகின்றனர். (202-207)

# போட்டிபோட்டு ஓடும் லொறிகளால் குடத்தனை வீதியில் பயணிப்போர் சிரமம்

குடத்தனை, செப்.8

வடமராட்சி குடத்தனைக்கு செல்லும் பிரதான வீதியில் போட்டிபோட்டு ஓடும் லொறிகளால் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குடத்தனைப் பகுதியில் உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றப்படும் மணல் குடத்தனை ஆறாங்கட்டைப் பகுதிக்கும் மணற்காட்டுச் சந்திக்கும் இடையில் உள்ள வெளிக்காணிகளில் பறிக்கப்படுகின்றது.

இந்த மணலை ஏற்றுவதற்காக குடாநாட்டின் பலபாகங்களிலும் இருந்தும் லொறிகள் வருகின்றன.

இவ்வாறு வரும் லொறிகள் மணற்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் பதிவு செய்து அதற்கான அனுமதியை பெற்ற பின்னரே மணல் ஏற்றமுடியும்.

முதலாவது, இரண்டாவது, மூன்றாவதாக பதிவுசெய்து அனுமதியை பெற்றுக் கொள்ளும் லொறி உரிமையாளர்களுக்கு இரண்டாந் தடவையும் மணல் ஏற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இதனாலேயே லொறி உரிமையாளர்கள் குடத்தனைக்குச் செல்லும் பிரதான வீதியில் முண்டியடித்து ஓடுகின்றார்கள்.

இதனால் மோட்டால் சைக்கிள்கள், சைக்கிள்களில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (203-78)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.8

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் தீவகப்பிரதேச இந்து தர்மாசிரியர்களுக்கு இன்று சனிக்கிழமை காலை 8மணிக்கு வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் க.தேவேந்திரன் கலந்துகொள்வார்.

இதேவேளை தென்மராட்சி பிரதேச தர்மாசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (203)

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கான சமய அறிவு போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சைவம் கிறீஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய பாடங்கள் கற்கும் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்பு மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளின் மதிப்பீட்டுப் பணிகள் உடன் நடைபெறவிருப்பதால் உரிய வகுப்புகளில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

நல்லூர் வடக்கு விநாயகர் வீதியில் உள்ள சனசமூக நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப. 2மணிவரை யாழ்.லயன்ஸ் கழகத்தினரால் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டு நீரிழிவு, கண், இரத்தஅழுத்தம் மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

பி.ஜே.பெர்ணாண்டோ நிறுவனத்தின் மருத்துவ முகாம்கண்பரிசோதனைகளை மேற்கொண்டு கண்ணாடி வழங்குவர். (203)

* * *

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட உளவளத் துணை ஆலோசனை நிலையம் நாளை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

முன்னாள் லயன்ஸ் கழக பிராந்திய தலைவர் த.தணிகாசலம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நிலையத்தை திறந்து வைப்பார். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உளநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சா.சிவயோகன், மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர். (203)

# விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சீருடைகள் அன்பளிப்பு

நவாலி, செப்.8

தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டு கொழும்பு செல்லும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் சீருடைகளை வழங்கியுள்ளது.

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சீருடை, சப்பாத்துகள், காலுறைகள் என்பவற்றை நிதியத்தின் கல்விசார் பொறுப்பதிகாரி பேரின்பநாதன் மாணவர்களுக்கு வழங்கிக், கௌரவித்தார்.

இப்பாடசாலையின் உடற்பயிற்சி மாணவ தலைவனுக்கு வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்துள்ளார். (202-100)

# படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட மோ.சைக்கிள் திருப்பித்தரப்படவில்லை

## சாவகச்சேரி நீதிவானுக்கு பொலிசார் அறிக்கை

யாழ்ப்பாணம், செப்.8

பொலிஸார் தடுத்து வைத்திருந்த மோட்டார் சைக்கிள்களை எடுத்துச் சென்ற படையினர் இதுவரை மீளக் கையளிக்கவில்லை என சாவகச்சேரி நீதிவானின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர் சாவகச்சேரி பொலிஸார். இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த திங்கட்கிழமை நாவற்குளியில் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்ட வீதிச் சோதனையின்போது ஆவணங்களின்றி வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றைத் தடுத்து வைத்தனர். ஆவணங்களைக் கொண்டுவருமாறு மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

உரிமையாளர் ஆவணங்கள் எடுத்து வரச்சென்ற பின்னர் அவ்வழியே வந்த படையினர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

உரிய ஆவணங்களுடன் உரிமையாளர் வந்தபோது மோட்டார் சைக்கிளை படையினர் எடுத்துச் சென்றதை அறிந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வரை பொலிஸ் நிலையத்தில் மோட்டார் சைக்கிள் வரும் எனக் காத்திருந்துவிட்டு அங்கு முறைப்பாடு செய்துவிட்டு வீடு சென்றார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (202-207)

# விலகிநின்று பார்த்துக்கொண்டிருக்கும் தரப்புப்போன்று அரசு செயற்படுகின்றது

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு அறிக்கை

கடந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து இதுவரை இலங்கையில் குறைந்தது 43 தொண்டர் நிறுவன ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பிறகு மேலும் 14 தொண்டு நிறுவன ஊழியர்கள் காணாமல் போயுள்ளனர்.

இலங்கையில் திவிரவாதிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் மோதல்கள் விரிவடைந்து வருவதைத் தொடர்ந்து பொதுமக்களைக் கொலை செய்வதாக அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

கடந்த சில வருடங்களில் மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில் மனித உரிமை மீறல்களும் அதிகரித்துள்ளன. குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் இருந்துவரும் பொறிமுறைகள் முற்றாகத் தோல்வியுற்றிருப்பதை இவை தெளிவாக எடுத்துக் காட்டுவதாக மேற்படி மனித உரிமை ஆணைக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

தனது குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள நிறுவனம் என்ற முறையிலல்லாமல் இலங்கை அரசாங்கமானது விலகிநின்று பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு தரப்பாகச் செயல்பட்டுவருகின்றது. இதுவரைக்கும் அழுத்தமான புலனாய்வு எதுவும் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று அது தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வார காலத்தில் 34 பேர் காணாமல் போயிருக்கின்றார்கள் என்று செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு வெளியிட்டிருந்த அறிக்கையைத் தொடர்ந்து ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது.

இந்த மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை ஜெனிவாவில் கூடும் ஐ.நா. மாநாட்டில் இலங்கையின் மனித உரிமை செயற்பாடு குறித்து விவாதிக்கப்படவிருக்கும் தறுவாயில் இந்த அறிக்கை வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த மாதம் வெளியிட்ட ஓர் அறிக்கையில், கடந்த ஆண்டு நூற்றுக்கணக்கானவர்கள் இலங்கையில் காணாமல் போயிருக்கின்றார்கள். கடந்த 20 ஆண்டு காலத்தில் இவ்வாறு காணாமல் போனவர்கள் தொடர்பான சம்பவங்கள் ஐ.நா.வின் ஆய்வில் இருந்து வருகின்றது. விசாரணைக்கென கொண்டு போகப்பட்ட அநேகர் பின்னர் காணாமல் போயுள்ளார்கள் என்று தெரிவித்திருந்தது. (ப)

# உலக விசர்நாய்க்கடி தினம் - செப்.08ஆம் நாள்

## நீங்கள் வளர்ப்பு நாயின் நலத்தைப் பேண



உள்ளூராட்சி மன்றங்கள் 476 அத்தியாயம் வனவிலங்கு விசர் நோய் கட்டளைச் சட்டத்தினையும் 477 அத்தியாயம் நாய்களைப்பதிவு செய்யும் சட்டத்தினையும் நடைமுறைக்கும் கொண்டுவருவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

★ ஒரு மாத வயதளவில் புற மருந்து கொடுக்கவும்
★ டிஸ்ரெம்பர் மற்றும் பாரோ போன்ற நோய்களில் இருந்து பாதுகாப்பதற்கு தடுப்பூசி கொடுக்கவும்.
★ தோல் வியாதி மற்றும் தோல் பூச்சியில் இருந்து பாதுகாக்க அருகில் உள்ள மிருக வைத்தியரை நாடவும்.
★ நாய் வீதியில் அலைவதைத் தடுக்க நாயைக்கட்டி வைத்திருங்கள் அல்லது கூட்டினுள் வளர்க்கவும்.
★ அரச சேவைகளை உபயோகப்படுத்துங்கள்
★ தேவையற்ற நாய்குட்டிகள் பிறப்பதைத் தவிர்ப்பதன் மூலமும் நாயை வீதியில் அலைந்து திரிவதை தவிர்ப்பதன் மூலமும் நாய்களை அழிப்பதை தவிர்க்கலாம்.

உங்கள் குடும்பத்தினரும் வளர்ப்பு நாயினதும் சமூகத்தினதும் நலத்திற்காக பொறுப்புடன் செயல்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**

❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..

Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**

ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.

Course Fee :3500/=

**Diploma in Video Mixing**

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.

Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX

Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 10/09/2007 09.00 AM


## வீடு வாடகைக்கு

திருநெல்வேலியில் இராமநாதன் வீதியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (64470)

## நாய் விற்பனைக்கு


1½ வயது நிரம்பிய ஜேர்மன் செப்பட் ஆண் நாயும் கூடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:
M.மார்க்கண்டு, M.S. லேன், கோண்டாவில் கிழக்கு.
ஞாயிற்றுக்கிழமை பார்வையிடவும்.
(64527) T.P.No.: 0776258115

## விற்பனைக்கு

ஜப்பான் நாட்டுத் தயாரிப்பான டைகற்சு சறேட் (Daihatsu Charade) 32 சிறி தொடர் இலக்கம் உடைய டீசல் காரும் அத்துடன் வெஸ்ப (Bespa) ஸ்கூட்டர் ஒன்றும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779215550. (64442)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பண்ணாகம்

அமரர்

பண்டிதர் **அ.ஆறுமுகம்**

தோற்றம்
16 - 12 - 1917

மறைவு
08 - 09 - 2004

பண்டிதர் அ.ஆறுமுகம் ஐயா எழுதிய நூல்கள் என்றும் எங்கள் நினைவில் உண்டு. நாம் விசவத்தனை முருகப் பெருமான் பாதத்தை வணங்கி நினைவு கொள்கின்றோம்.

பண்ணாகம், சுழிபுரம். (சி/53562) **நினைவுச் சபையார்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 . 03 . 1941



உதிர்வு 20 . 08 . 2006

**அமரர் நடராசா அருளானந்தம்**

(பெரியண்ணை)

திதி: துவாதசி (08.09.2007)

"நெஞ்சு இருக்கும் வரையில்
உங்கள் நினைவுகள் இருக்கும்"

இன்று (08.09.2007) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (64612)

**சிவதாசன்** (மகன் - சுவிஸ்),
**குடும்பத்தினர்.**

## மரக்கன்றுகள் விநியோகம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு வேள்ட் விஷன் நிறுவனம் மரக்கன்றுகளை வழங்கியுள்ளது.

கொய்யா, மா, பலா, மாதுளை, எலு மிச்சை போன்ற பயன்தரு மரக்கன்றுகளுடன் மகோக்கனி மரக்கன்றும் வழங்கப்பட்டுள்ளன. (202-111)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

குடத்தனைப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் யுனிசெவ் நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

குடத்தனைப் பிரதேசத்தைச் சேர்ந்த அம்பன் அ.மி.த.க. பாடசாலை, பொற்பதி அ.த.க.பாடசாலை, நடுக்குடத்தனை அ.த.க.பாடசாலை, குடத்தனை அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்தக் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.(203-78)

## மூன்றாவது வருட சிரார்த்தமும் நினைவஞ்சலியும் (08.09.2007)

அன்னை மடியில் 11 - 08 - 1930



அம்பலத்தாடுவான் அடியில் 11 - 09 - 2004

**திருமதி மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்**

திதி: இன்று ஆவணி மாதத்து அபரபக்க துவாதசி
(சனிக்கிழமை)

தங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். (64407)

'எபநேசர்'
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை (ஜெயசி).

## மகளிர் சங்கத்தினருக்கு தொடர்பாடல் கருத்தரங்கு

சொன்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கு 'பரிந்துரையும் தொடர்பாடலும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு அண்மையில் ஆனைக்கோட்டை துரைஐயா மண்டபத்தில் நடைபெற்றது. (202-100)

## இ.போ.சபையின் மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், செப்.8

இலங்கை போக்குவரத்துச்சபையின் (வடக்கு) 50 ஆவது ஆண்டுப் பூர்த்தியையும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 30 வருடப் பூர்த்தியையும் முன்னிட்டு இலங்கைப் போக்குவரத்துச்சபையால் (வடக்கு) வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் 'மலர்க்குழு, இளைப்பாறிய ஊழியர் சங் கம், இ.போ.ச.(வடக்கு), 384, கோயில் வீதி, நல் லூர்' என்னும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## குரும்பசிட்டி மாணவருக்கு புலமைப்பரிசில் வழங்கத் திட்டம்

தெல்லிப்பழை குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் குரும்பசிட்டி மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது.

2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்றோர், ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 8 பாடங்களில் அதிதிறமைச்சித்தி பெற்றோர், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தோர் ஆகியோருக்கு இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இக்கிராமத்தைச் சேர்ந்த தகுதி உடையவர்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களை அனுப்பிவைக்குமாறு சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (203)


COMPUTER COURSES

New Batches Start on

Batch 1 : 14.09.2007
Batch 2 : 15.09.2007
Batch 3 : 23.09.2007
Batch 4 : 24.09.2007
at 10.00 A.M



உங்கள் முயற்சிக்கு....



இல்ங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



Diploma in Microsoft Office 2000/-
Diploma in Desk Top Publishing 2000/-
Diploma in Internet Technology 3000/-
Diploma in Hardware Technology 4000/-
Diploma in Computer Programming 6000/-
Diploma in Eng. Drawing & AutoCAD 5000/-
Diploma in Computerized Accounting 4000/-

Adobe PageMaker · Adobe Premiere · Adobe Photoshop · Corel DRAW · Macromedia Flash · VB . NET · Java · C/ C++

இக்கட்டணச் சலுகை இப்பிரிவுக்கு மட்டுமே !

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
# 100. Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Fax: 021 222 6933 Email: iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றுக்கு வரமறுத்து ஜனாதிபதி 'பங்கரு'க்குள் பதுங்கி இருக்கின்றாரா?

## மாதத்திற்கு ஒரு முறையாவது வரவேண்டும் என்கின்றார் ஜே.வி.பி. உறுப்பினர்

கொழும்பு, செப்.8

நாட்டில் பாதுகாப்பு இல்லை என்று கருதி ஜனாதிபதி பதுங்கு குளிக்குள்ளேயே பதுங்கியிருக்கிறாரா? ஜனாதிபதியின் கீழுள்ள அமைச்சுகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இரண்டு மாதத்துக்கு ஒருமுறையாவது அவர் நாடாளுமன்றத்துக்கு வந்து விளக்கம் அளிக்கவேண்டும் என ஜே. வி.பி உறுப்பினர் விமல் ரட்ணாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நிதி அமைச்சினால் முன்மொழியப்பட்ட ஐந்து நிதித் திருத்தச் சட்டங்கள் தொடர்பான பிரேரணைகள் சபையில் முன்வைக்கப்பட்டபோது அங்கு சர்ச்சை ஏற்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக சபையில் அறிவிக்கப்பட்டபோது, ஐ.தே.க. உறுப்பினரும் எதிர்க்கட்சிக் கொரடாவுமான ஜோஸப் மைக்கல் பெரேரா ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பினார்.

அதற்க அமைச்சர் ஜெயராஜ் பதில் அளிக்கையில்

நிதி அமைச்சுத் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அதில் ஜே.வி.பியினரும் ஐ.தே.கவினரும் (கரு ஜயசூரிய அணி) கலந்துகொண்டனர். அங்கு பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே இன்று சபையில் நிதி திருத்தச் சட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பிரதி நிதி அமைச்சராக ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார். உங்களுடைய கேள்விக்கு அவர் நாடாளுமன்றில் பதில் அளிப்பார்'' - என்றார்.

''என்ன ஐயா இது? நாங்கள் ஜனாதிபதியிடம் கேட்கவேண்டும். அவர் வந்து பதில் அளிக்கவேண்டும் என்று கேட்டதற்குத் தண்டனையாக பிரதி நிதி அமைச்சரை நியமித்தீர்கள். நாங்கள் ஜனாதிபதியைப் பார்க்கவே கூடாது என்பதா உங்களுடைய திட்டம்?'' - என ஜே.வி.பி உறுப்பினரான அனுர குமார திஸ்ஸநாயக்க மற்றுமொரு கேள்வியை எழுப்பினார்.

இதனை ஐ.தே.கவினரும் ஆதரித்தனர்.

"இவர்களை எப்படி நம்புவது? கடந்தமுறை ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வந்தபோது அமைச்சர்களின் வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் பாதுகாப்புப் படையினரால் ஓரங்கட்டப்பட்டன. அப்போது இவர்கள்தான் பெரும் பிரச்சினையைக் கிளப்பி ஆரவாரம் செய்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனால்தான் ஜனாதிபதியை இங்கு வரவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டுள்ளோம்'' - என்று சுட்டிக்காட்டினார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

''உங்களுடைய கூற்றை ஏற்றுக்கொள்கிறோம். நாடாளுமன்றத்திற்கு வருவது பாதுகாப்பு இல்லை என்று ஜனாதிபதி பங்கருக்கு உள்ளேயா பதுங்கி இருக்கிறார்? அவர் பாதுகாப்பற்ற நாட்டுப்புறங்களுக்கும் செல்கின்றார். மக்களைச் சந்திக்கின்றார். கூட்டங்களை நடத்துகின்றார். நாடாளுமன்றத்துக்கு மட்டும் ஏன் வரமுடியாது?

''இரண்டு மாதத்துக்கு ஒரு முறையாவது அவர் நாடாளுமன்றத்துக்கு வருகைதந்து உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்'' என ஜே.வி.பி . உறுப்பினர் விமல் ரட்ணாயக்க கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

இதற்கு நேரடியான பதில் எதுவும் தரப்படவில்லை.

என்றாலும் ''இந்த ஐந்து திருத்தச் சட்டங்கள் தொடர்பாக தெரிவுக்குழு மற்றும் ஆலோசனைக் குழுக்களின் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் இந்தச் சட்டமூலங்களின் மீது விவாதம் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. எனவே விவாதத்தை நடத்தலாம்'' - என சபாநாயகர் அறிவித்தார்.

சபாநாயகரின் தீர்ப்பை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். (சி)

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் 22ஆம் நாளான இன்று சனிக்கிழமை 'இந்து சமய இறைமைகள்' என்னும் தலைப்பில் கவிமாமணி காரை எம்.பி.அருளாணந்தன் சொற்பொழி வாற்றுவார். அராலி குலமாதா அறநெறிப் பாடசாலை, சங்கரத்தை முருகமூர்த்தி கோயில் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203-79-111)

* * *

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தால் தயாரிக்கப்பட்ட நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம் ஆகிய தலங்கள் மீது பாடப்பட்ட இசைப்பாக்களும் நடன அளிக்கையும் அடங்கிய 'அழகன் முருகன்' காண்பிய இறுவட்டு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி க்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானமும் கலந்துகொள்வர். (203)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



கற்றவர் விழுங்கும் கருணை யாளன்
மற்றவ ரறியா மாணிக்க மாமலை
சிற்றறி வுடையார் நேரார் செல்வன்
நற்றவர் வணங்கும் நல்லூ ரானே

- யோகர் சுவாமிகள்

### நல்லூர் முருகனைப் பாடு

*திருவகுட் பந்தாதி ஒதிடு வோம்! - நமன்*
*திசைவரும் தீப்படை மோதிடுவோம்*
*அருளலங்காரம் படித்திடுவோம் - கந்தர்*
*அனுபூதி மேவத் துடித்திடுவோம்*
*பாடும் பணியினைக் கொண்டிடுவோம் - முக்கட்*
*பரஞ்சுடர் மைந்தனைக் கண்டிடுவோம்*
*நாடும் அருண கிரிவாக்கே நம்மை*
*நாளும் உயர்த்தும் ஒளிவாக்கே!*

**சைவப் புலவர் செ.பரமநாதன்**

### திறன்காட்டி ஆளாயோ?

*ஊழ் வினைகள் போக்கியெமை உய்விக்க வந்தவனே*
*பாழ்வினைகள் நீக்கியெமை பரிசுத்தமாக்காயோ*
*சூழ்வினையால் உன் மக்கள் படுகின்ற பெருந்துயரம்*
*விழ்வதற்கு உன்வேலின் திறன் காட்டி ஆளாயோ.*

மு.க.சிவானந்தம்.




நல்லூர் கந்தசுவாமி கோயிலில்

இன்று இருபத்திரண்டாம் திருவிழா – ஒருமுகத் திருவிழா

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

அருள்விநாயகர் மோட்டோர்ஸ்
அருள் விநாயகர் றேடர்ஸ்

இல. 106, 108 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# வளர்த்தெடுக்கப்பட வேண்டிய தீவகத்தின் விளையாட்டுத்துறை! யார் அதற்கு முன்வருவார்?

## விளையாட்டு

யாழ். குடாநாட்டில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் விளையாட்டுத்துறையில் வீர, வீராங்கனைகள் தமது திறமைகளைக் கணிசமான அளவில் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

எனினும் தீவகப் பகுதியின் விளையாட்டுத் துறையில் அண்மைக்காலமாக சற்றுத் தளர்வு ஏற்பட்டுள்ளதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் தீவகத்திலும் குறிப்பிடத்தக்க விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். எனினும் இன்று அந்த நிலையில் பெரும் பின்னடைவுகள் காணப்படுகின்றன.

இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டியது துறைசார் அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். இதற்கு வழியேற்படுத்த வேண்டியது அப்பகுதியில் உள்ள பாடசாலை களின் விளையாட்டுத்துறை ஆசிரியர்கள், விளையாட்ட அலுவலர்கள், ஆர்வலர்கள் ஆகியோரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

வெறுமனே இன்றைய நாட்டுச் சூழ்நிலையைக் காரணங்காட்டி நாம் ஒதுங்கித் கொள்வது எமக்கு மேலும் மேலும் பின்னடைவுகளையே தரும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் இடம்பெயர்ந்து பின்னர் மீண்டும் தீவகத்தில் சென்று குடியேறியவர்கள் தாம் தமது சொந்த மண்ணிலேயே வாழ வேண்டும் என்ற பற்றுடன் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த மக்களுடைய பிள்ளைகள் கல்வி, விளையாட்டு உட்பட அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குவதற்கு உதவி புரிய வேண்டியது அங்கு கடமையாற்றும் அனைத்து அரச மற்றும் ஏனைய துறைசார் ஊழியர்களினதும் கடமையாகும்.

ஒருபிரதேசத்தில் மக்களின் வாழ்வியலுக்கு வழிகாட்டியாக நின்று அவர்களை மேம்படுத்த வேண்டிய்து அப்பகுதியில் உள்ள கல்விமான்கள், சமூகப் பெரியார்கள் ஆகியோரின் முயற்சிகளே.

இதற்குச் சிறந்தொரு உதாரணத்தைக் குறிப்பிடலாம். இம்முறை பாடசாலைகளுக்கு இடையேயான தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு வீரர்களின் 4x400 அஞ்சலோட்ட அணியும் உதைபந்தாட்ட அணியும் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்குக்காரணம் அப்பாடசாலை அதிபரின் முழுமுயற்சியும் ஆசிரியர்களின் உதவியுமே. இதேபோன்று ஏனைய பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், விளையாட்டு அலுவலர்கள் ஆர்வத்துடனும் பொறுப்புடனும் செயற்பட்டால் தீவகத்தின் விளையாட்டுத்துறையில் ஏற்பட்டுள்ள தேய்வினைசரிசெய்ய முடியும்.

கடந்தகாலத்தில் குண்டு எறிதலில் யாழ். மாவட்டத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த செபமாலைமுத்து என்பவர் ஏற்படுத்திய சாதனை பல ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்றுவரை முறியடிக்கப்படவில்லை என்பதனை இங்குகுறிப்பிடுதல் பொருத்தமானது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த கருணகலாதேவ என்பவர் களப்போட்டிகளில் மாவட்ட சாதனைகளை ஏற்படுத்தியிருந்தார். இவர்கூட இனங்காணப்பட்டு அன்றைய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அலுவலர் விஜிதரன் மேற்கொண்ட முயற்சியின் பலனாக உருவாக்கப்பட்ட வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

4x400மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் உள்ளபோதிலும் தனிநபர் போட்டிகளில்அவர்களால் ஏன் முன்நிலை பெறமுடியவில்லை என்பது குறித்து ஆராயவேண்டியுள்ளது.

இத்தகைய குழுப் போட்டிகளில் முன்னிலையில் காணப்படும் வீரர்கள் தனிப்பட்ட போட்டிகளிலும் முன்னிலையில் மிளிர உரிய பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்க வேண்டியது விளையாட்டுத்துறை சார்ந்தவர்களின் பாரிய பணியாகும்.

தீவகத்துக்கு இன்று பெரும்பான்மையான அரச அலுவலர்கள் யாழ்.குடாநாட்டிலிருந்து சென்று வருபவர்களாகவே உள்ளனர். விளையாட்டுத்துறைசார் உத்தியோகத்தர்களும் அவ்வாறே பணியாற்றுகின்றனர். இந்நிலையில் அங்குள்ள விளையாட்டு வீரர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்குவதென்பது, இவர்களுக்குச் சற்றுக் கடினமான விடயமாகவே உள்ளது.

இதன் காரணமாக விளையாட்டுத்துறை விடயத்தில் உரியவர்கள் அவ்வளவு அக்கறை காட்டாமல் அலுவலக நேரம் முடிந்தவுடன் வீடு திரும்புபவர்களாகவே உள்ளனர். இதனால் அங்கு விளையாட்டுத் துறையில் தொய்வு ஏற்பட்டுள்ளது எனப் பலரும் கூறுகின்றனர்.

எனினும், இந்த நிலைமை தொடர்வதை அனுமதிக்க முடியாது. அவ்வாறு தொடர்ந்தால் தீவகத்தின் விளையாட்டுத்துறை முற்றாக மூழ்கிவிடும் நிலை ஏற்படும். எனவே விளையாட்டுத்துறைசார் உத்தியோகத்தர்கள்

(06 ஆம் பக்கம் பார்க்க)






நல்லூர் சென்.ஜேம்ஸ் தேவாலயத்தினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் வணபிதா. ஜோசப் நைற் ஞாபகார்த்த கேடயத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் 2007 ஆம் ஆண்டிற்கான இறுதி ஆட்டத்தில், வை.எம்.சி. அணியை வெற்றிகொண்டு கேடயத்தை சுவீகரித்த செலான் வங்கி அணி அதன் யாழ்.கிளை முகாமையாளர் அ.சி.அரவிந்தனுடன் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் அணித் தலைவர் பா.ஜ.டில்ஷான், சென். ஜேம்ஸ் ஆலய பங்குத்தந்தை வணபிதா [illegible] வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொள்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 30 - 03 - 1982

ஆண்டவன் அடியில் 19 - 09 - 2006



## அமரர் யோகராசா தமிழ்ச்செல்வன்

## (பெரியதம்பி)

(உரிமையாளர் : ஐங்கரன் கிறீம் ஹவுஸ்,அச்சுவேலி)

திதி: 08.09.2007

நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உன் அன்பால் யாவருக்கும்
இனியவராய் வாழ்ந்து
எம்மைவிட்டுப்பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
நினைவிழக்க முடியாமல் நாம் நீந்துகின்றோம் கண்ணீர்க்கடலில்.

உன் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்

பத்தமேனி, அச்சுவேலி. குடும்பத்தினர்.

(63153)

**வளர்த்தெடுக்கப்பட வேண்டிய...**

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரிய பயிற்சிகளை - உரியவேளைகளில் அங்குள்ள வீரர்களுக்கு வழங்கவேண்டும். இதற்காக அவர்கள் அங்கு தங்கிநின்று செயற்பட வேண்டிய நிலையும் உருவாகும். எனினும் அது தவிர்க்க முடியாததே.

தீவகத்தில் உள்ள இளைய தலைமுறையின் ஆற்றல்கள், திறமைகள், சரியான முறையில் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். குடாநாட்டில் ஏனைய பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் போன்று அவர்களும் விளையாட்டுத் துறையில் மிளிர வேண்டும்.

தீவகப் போக்குவரத்து, யாழ்.குடாநாட்டின் ஊரடங்கு என்பன யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்துக்குக் கடமைக்குச் செல்லும் உத்தியோகத்தர்களுக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளன என்பது அனைவருக்கும் தெரியும். ஆயினும் நாம் எமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது என்பதை யாவரும் மறந்துவிடக் கூடாது. அதற்கேற்றவாறு சிறந்த முறையில் திட்டங்களை வகுத்துச் செயற்பட்டால் தீவகத்தின் விளையாட்டுத்துறையும்வளர்ச்சி அடையும். அத்துடன் உத்தியோகத்தர்களின் பணியும் சிறப்படையும்.

பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் தீவகத்தில் விளையாட்டு அலுவலர்களாகப் பணிபுரிவோர் தீவகத்தின் நட்சத்திரங்களை இனங்கண்டு மிளிரச் செய்யவேண்டும் என்றே அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். அதனை அவர்கள் திறம்பட செய்வார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

எதிர்காலத்தில் சிறந்த திட்டமிடல் மூலம் தீவக உடற்கல்விப் பணிப்பாளர்கள், விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டு ஆசிரியர்கள் ஆகியோர் சிறந்த முறையில் செயற்பட்டால் தீவகவிளையாட்டுத்துறை கணிசமான வளர்ச்சிகாணும் என்பதில் ஐயமில்லை.

## ஆலய சந்நிதிகளில்

கா[illegible]ரநகர், பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலய இராஜகோபுர மகாகும்பாபிஷேகமு[illegible]ம் மணிமண்டபத்திறப்பு விழாவும் இன்று ச[illegible]னிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகமும் தொடர்ந்து மணிமண்டபத்திறப்பு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும் இட[illegible]ம்பெறும். (203)

* * *

அதியுயர் பாதுகாப்பு வலையத்தினுள் அமைந்துள்ள மாவிட்டபுரம் வீணிய வரை இராஜேஸ்வரி அம்பாள் ஆலய 30 ஆவது வருட அபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆலயத்திற்குச் செல்லவுள்ள பக்தர்களை அன்றையதினம் காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை தடைமுகாமிற்கு வருகை தருமாறு ஆலய நிர்வாகம் கேட்டுள்ளது. காலை 9 மணி தொடக்கம் பி.ப.3மணி வரை பக்தர்கள் ஆலத்திற்குச் சென்று வழிபட படைத்தரப்பால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (203)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 09 - 1925

மறைவு 31 - 08 - 2005



அமரர்

## சுந்தரம் சுப்பிரமணியம் (டடா)

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்,
யாழ் .போதனா வைத்தியசாலை)

திதி: 08.09.2007

உங்களைப் பிரிந்து ஆண்டு இரண்டு ஆனதோ
எங்கள் அன்புத் தெய்வத்தின் திருமுகம்
என்றும் மறவாது.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(64616)



# முதலாம் ஆண்டு துவாதசித் திதி

# நினைவலைகள்

## அமரர் சின்னத்தம்பி சிவமகாராஜா

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், இயக்குநர் - நமது ஈழநாடு பத்திரிகை)

அன்னை மடியில் 28-06-1938

இறைவன் அடியில் 20-08-2006

மகாத்மாவின் இலக்[illegible]த்தில் பிறந்து,
மகாராஜா என்ற சிறப்புப் பெயர்பெற்று உயர்ந்தவரே!
தந்தை செல்வாவின் சாத்வீக நெறியில் வளர்ந்து
நாடாளுமன்றில் கூட்டுறவுக்காய் குரல்கொடுத்த உத்தமனே!
பத்திரிகைத் தர்மத்திற்கு இலக்கணம் வகுத்த
ஊடகவியலாளன் எனப் பாராட்டுப்பெற்ற பெருமைக்குரியவரே!
வலி.வடக்கு தொண்டு நிறுவனங்களுக்கு தலைமைதாங்கி
ஏழைகளின் கண்ணீர் துடைத்த சேவைச் செம்மலே!
உன் பிரிவு கேட்டு மானிடமே அலறி அழுததுகண்டு
திகைத்தோமையா!
இப்படி ஓர் இழப்பினைக் காண்பதற்கா நாம் இங்கு பிறந்தோம்.

அன்னாரின் நினைவாக இன்று (08.09.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அவருடன் உறவாடிய அன்பர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(எல்லோருக்கும் தனிப்பட்ட அழைப்பு அனுப்பமுடியாமையையிட்டு வருந்துகின்றோம்)

கோணப்புலம், மல்லாகம். சகோதரர்கள்.

(64619)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யுத்த முனைப்பைக் கைவிடாதவரை நாட்டின் பொருளாதாரம் சீர்படாது

கொழும்பு அரசு தன்து வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க இன்னும் சரியாக இரண்டு மாதங்களே இருக்கின்றன. அதற்கிடையில் பெரும் தொகை நிதியை மக்களிடமிருந்து வரி என்ற பெயரில் மேலும் சுரண்டி எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டிருக்கின்றது. அதனலேயே புதிய, புதிய நிதி அறவீடுகளுக்கு வழி செய்யும் ஐந்து சட்டமூலங்களை ஒரே சமயத்தில் 'மினி பட்ஜெட்' போல சமர்ப்பிக்க வேண்டிய இக்கட்டு அதற்கு நேர்ந்திருக்கின்றது.

இந்த அரசின் கொள்கைப் போக்கும் அதன் காரணமாக மோசமான பொருளாதார நிலைமையும் தொடர்ந்தும் இதே போன்று சீர்கெட்டு வருமானால் வருடாவருடம் 'பட்ஜெட்' சமர்ப்பிக்கும் நிலைமை மாறி, மாதாந்தம் நாடாளுமன்றம் கூடும் ஒவ்வொரு சமயத்திலும் 'மினி பட்ஜெட்' சமர்ப்பிக்கப்படும் நெருக்கடி நிலைக்கு நாடு தள்ளப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சர்வதேச நாடுகளிடமும், சர்வதேச அமைப்புகளிடமும் கையேந்திக் கடன் வாங்கி அரசினதும், அரசுத் தலைவர்களும் களைத்து விட்டார்கள். இப்போது இந்த நாடு பெற்றுள்ள கடன்களின் மொத்தப் பெறுமதி - அதாவது இந்த அரசு திருப்பிச் செலுத்தவேண்டிய பொறுப்பும் கடப்பாடும் உள்ள தொகை - இரண்டு லட்சத்து 77 ஆயிரத்து 700 கோடி ரூபாவாகும். அதாவது, இந்தத் தீவின் ஒவ்வொரு பிரசையின் பேரிலும் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவை அந்நியக் கடன் தொகையாக வாங்கிக் குவித்திருகின்றது அரசு.

வெளிநாடுகளிடமும், சர்வதேச பொது அமைப்புகளிடமும் முழு அளவில் விறாண்டிச் சுரண்டி எடுத்துவிட்ட நிலையில், இப்போது வெளிநாட்டு வர்த்தக வங்கிகளிடம் உயர் வட்டிக்குக் கடன் வாங்கக் கழுத்தைக் கொடுக்கின்றது அரசு. இந்த விவகாரமே இப்போது தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையாகவும் உருவெடுத்திருக்கின்றது.

நவீன இலத்திரனியல் தொழில்நுட்பத்துக்குள் சர்வதேசம் வேகமாகப் பிரவேசித்துக் கொண்டிருக்கையில் தெரிந்தோ, தெரியாமலோ - விரும்பியோ, விரும்பாமலோ - அதனுடன் சேர்ந்து பயணிக்க வேண்டிய கட்டாயம் மூன்றாம் மண்டல நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் கணினி, கைத்தொலைபேசி போன்றவை இலங்கை போன்ற அபிவிருத்தி அடையவேண்டிய நாடுகளிலும் அதன் சாதாரணமக்களின் அன்றாட - அத்தியாவசிய - தவிர்க்க முடியாத - பாவனைக் கருவிகளாகிவிட்டன. இந்தக் கைத்தொலை பேசிகளுக்கு மாதாந்த கட்டணத்தில் பத்து வீதம் மேலதிகமாக வரியாக அறவிடும் எத்தனம், நாட்டின் சாதாரண மகன் ஒவ்வொருவரினதும் சட்டைப்பையை நன்கு கடிக்கப்போகின்றது என்பது தெளிவு.

அடிக்கடி அதிகரித்து வரும் எரிபொருள், எரிவாயு விலை அதிகரிப்பு, சங்கிலித் தொடராக ஏனைய அனைத்து அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை, கட்டணங்களில் அதிகரிப்பை ஏற்படுத்துவது போல, கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் மீது விதிக்கப்படும் புதிய வரிகளும் ஏனையவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன என்பது நிச்சயம்.

ஆயினும் இந்த வரி அதிகரிப்பு சாதாரண மக்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது என்று நாடாளுமன்றில் 'கயிறு' விட்டிருக்கின்றார், இத்தகைய வரி அதிகரிப்புக்கு வழி செய்யும் ஐந்து சட்டமூலங்களையும் நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய பிரதி நிதிஅமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய.

ஆனால், இத்தகைய வரிவிதிப்புகளை மக்கள் மீது திணித்து, அவர்களின் வாழ்க்கைச் சுமையை அதிகரித்து, நாட்டின் வளத்தை சிதைப்பதற்கான தேவை ஏன் எழுந்தது என்பதை முதலீட்டு ஊக்குவிப்பு, பாரிய செயல்திட்ட அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டு வெளியிட்டிருக்கின்றார்.

''நாட்டில் பெரும் யுத்தம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு அதிகம் நிதி செலவிடப்படுவதால் இத்தகைய பொருளாதாரச் சிக்கல்கள், நெருக்கடிகள் ஏற்படுகின்றமை தவிர்க்க முடியாத விவகாரம்.'' - என்று அவர் கூறியிருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற கனவைக் கண்டுகொண்டு, அந்தக் கானல் நீரை நம்பி அதன் பின்னால் இழுபடுகின்றது கொழும்பு அரசுத் தலைமை.

அதனால் மனித உயிரிழப்புகளும் பேரழிவுகளும் ஒரு புறம் சோகமாகத் தொடர, மறுபக்கத்தில் இலங்கைத் தீவின் பொருளாதாரம் மோசமாக அடிபட்டுக் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைமைக்குப் போய்விட்டது.

நீதியும், வாழ்வுரிமையும் கேட்டுப் போராடும் தமிழினத்துக்கு நியாயம் செய்ய மறுத்து, பௌத்த - சிங்களப் பேரினவாதத் திமிரில், அடக்குமுறை முனைப்போடு சந்நதம் கொண்டு நிற்கும் கொழும்பு, அந்தப் போக்குக் காரணமாக கொடூர யுத்தத்துக்காகக் காசைக் கரியாக்கி, அதன் சுமையை அப்பாவி மக்கள் மீது சுமத்தி - அழுத்தி - நிற்கின்றது.

இந்த யுத்த முனைப்புப் போக்கில் - போர் வெறித் தீவிரத்தில் - இருந்து அரசுத் தலைமை வெளியே வந்து, இனப்பிரச்சினைக்கு அமைதி வழியிலும் சமாதான முறையிலும் தீர்வு காணும் எத்தனத்தில் இதய சுத்தியோடு ஈடுபட முன்வராதவரை, மூழ்கிச் செல்லும் நாட்டின் பொருளாதார நிலையை மீளத் தூக்கி நிறுத்தவே முடியாது. அதனோடு சேர்ந்து அழுந்துவதுதான் நாட்டு மக்களின் ஒரே தலையெழுத்தாகவும் இருக்கும்.

# இலங்கையுடன் உயர் பாதுகாப்புக் குழுவா? இல்லையென அடியோடு மறுக்கிறது இந்தியத் தரப்பு!

கொழும்பு, செப். 8

இலங்கை அரசின் உயர்மட்டக்குழு புதுடில்லி சென்று இந்திய அரசுத் தலைமையுடன் நடத்திய பேச்சுகளைத் தொடர்ந்து இரு நாடுகளும் சேர்ந்து உயர் மட்டப் பாதுகாப்புக் குழு ஒன்றை அமைத்திருக்கின்றன என்று வெளியான செய்தியை இந்தியத் தரப்பு அடியோடு மறுத்துவிட்டதாகத் தெரியவருகின்றது.

அத்தகைய உயர்மட்டப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டிருப்பது பற்றிய செய்தி இலங்கை ஜனாதிபதி செயலகத்தின் செய்திக் குறிப்பிலேயே குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனையே இந்தியத் தரப்பு இப்போது மறுத்துரைக்கின்றது. அப்படிப் பாதுகாப்புக் குழு ஏதும் அமைக்கப்படவேயில்லை என்றும் இந்தியத் தரப்பு சாதிப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தக் குழுவில் இலங்கைத் தரப்பில் இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் -

இந்தியத் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் விஜய் சிங், பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஆகியோரும் இடம்பெறுகின்றனர் என்றும் -

புதுடில்லியில் இலங்கை உயர் அதிகாரிகள் குழு கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நடத்திய பேச்சுகளின் பெறுபேறாகவே இந்தக் குழு அமைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் -

ஜனாதிபதி செயலகச் செய்திக் குறிப்பு தெரிவித்திருந்தது.

''இரு தரப்பினரும் பரந்த - விசாலமான - பல்வேறு விடயங்கள் பற்றி எல்லாம் பேசினர். இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்புக் கூட்டுச் செயற்பாடு உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன. வடக்கு, கிழக்கு பிரச்சினை குறித்தும், அதற்கான அமைதித் தீர்வு குறித்தும் கூட கலந்தாலோசிக்கப்பட்டது. ஆனால் பாதுகாப்பு உயர் குழு என்று ஏதுவும் அமைக்கப்படவேயில்லை'' - என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் இலங்கை அரசின் உயர்குழு புதுடில்லியில் பேச்சு நடத்தியது. ஆனால் இரு நாடுகளும் சேர்ந்து உயர்பாதுகாப்புக் குழு அமைத்திருப்பதான செய்தி வெள்ளியன்று கொழும்பில்தான் வெளியானது. இரு நாடுகளும் சேர்ந்து அத்தகைய முடிவை எடுத்திருந்தால் அது பற்றிய தீர்மானம் கூட்டறிக்கையாகவோ அல்லது சந்திப்புக்கள் முடிவுற்ற கையோடு புதுடில்லியில் அறிவிப்பாகவோ வெளியாகியிருக்கும் என்றும் புதுடில்லி அதிகார வர்க்கத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

(''இந்தியா - இலங்கை இணைந்து அலுவலர் உயர் பாதுகாப்புக் குழு'' என்ற தலைப்பில் அமைக்கப்பட்டது குறித்த செய்தி நேற்றைய உதயனில் பிரசுமாகியது)

## கைதடியில் நேற்றுமாலை வர்த்தகர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப். 8

கைதடி வடக்கில் நேற்றுமாலை 5.30 மணியளவில் வர்த்தகர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த செல்லையா ஜெய பாலசிங்கம் (வயது - 60) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கடையில் இருந்து தமது மகளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்த வர்த்தகர் மகளைவீட்டு வாசலில் இறக்கி விட்டு, கடைக்கு திரும்பிச் செல்லும் போது, சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

ஏ - 9 வீதியில் கைதடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக இவர் தேநீர் கடை நடத்தி வந்தார். (அ-1-79)

விசேட அடையாள அட்டை

# ஏற்கனவே படிவம் கையளித்தவர்கள் புதிதாக கையளிக்கத் தேவையில்லை

## யாழ். நகரத் தளபதி சொல்கிறார்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். 512ஆவது படையணிக்கு உட்பட்ட பகுதியில் விசேட அடையாள அட்டையைப் பெறுவதற்காக படிவங்களை ஏற்கனவே சமர்ப்பித்தவர்கள் மீண்டும் (பிந்தி விநியோகிக்கப்படும்) படிவங்களை கையளிக்கத் தேவையில்லை.

யாழ். நகரத் தளபதி கேணல் பி. ஜய சுந்தர இத்தகவலைத் தெரிவித்தார்.

அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்குப் புதிய படிவங்கள் விநியோகிக்கப்படுவது குறித்து கேட்டபோதே அவர் மேலும் இதனைத் தெரிவித்தார்.

பொது மக்களால் ஏற்கனவே கையளிக்கப்பட்ட படிவங்களில் இருந்து விவரங்களைப் பெற்று புதிய படிவங்களை படையினரே மேற்கொள்வர்.

தற்சமயம் 10 ஆயிரம்படிவங்கள் கிடைத்துள்ளன. அந்தப் படிவங்கள் கிராம சேவையாளர்கள் மூலம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இதுவரை படிவங்களைக் கையளிக்காதவர்கள் புதிய படிவங்களில் விவரங்களை பதிந்து கையளிக்கலாம் - என்று யாழ். நகரத் தளபதி தெரிவித்தார். (அ-1)

# சிலாவத்துறையிலும் முள்ளிக்குளத்திலும் கடற்படையினரின் இரண்டு முகாம்கள்

கொழும்பு, செப். 8

அண்மையில் படையினரால் கைப்பற்றப்பட்ட சிலாவத்துறை, முள்ளிக்குளம் ஆகிய பிரதேசங்களில் கடற்படையினர் இரண்டு முகாம்களை அமைத்துள்ளனர்.

கடற்படையின் கொமடோர் கே.பி. ரட்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

இங்குள்ள கடற்பிரதேசங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதே எமது நோக்கம். இதன்மூலம் இப்பிரதேசங்களில் இடம்பெறும் பயங்கரவாதச் செயற்பாடுகளை நிறுத்தமுடியும்.

சிலாவத்துறை, முள்ளிக்குளம் கடற்பகுதிகளில் இடம்பெறும் மீன்பிடித் தொழிலை வழமைக்கு கொண்டுவர இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி பிரதேசங்களில் இருந்தே கொழும்புத்துறைமுகம் உட்பட தலைநகரின் பிரதான பொருளாதார மையங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த வருவது கண்டறியப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தாம் கொள்வனவு செய்யும் ஆயுதங்களை சிலாவத்துறைப் பிரதேசத்திலேயே இறக்குவது கண்டறியப்பட்டது. கடந்த வருடத்தில் பல தடவைகள் இவ்வாறு கொண்டு வரப்பட்ட ஆயுதங்களும் இழுவைப் படகுகளும் கடற்படையினரால் அழிக்கப்பட்டிருந்தன - என் றும் கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# மரக்கறி எண்ணெய், சன்லைட், உப்பு பங்கீட்டு அட்டைக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 8

குடாநாட்டில் ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் மரக்கறி எண்ணெய், சன்லைட் சவர்க்காரம், உப்பு ஆகியன பங்கீட்டு அட்டைக்கு விநியோகம் செய்யப்பட உள்ளன.

யாழ். செயலகத்திட்டப் பணிப்பாளர் ம. பிரதீபன் இதனைத் தெரிவித்தார்.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள பொருள்களில் ஒரு லட்சம் போத்தல் மரக்கறி எண்ணெய், மூன்று லட்சத்து 60 ஆயிரம் சன்லைட் சவர்க்காரம், 92 மெற்றிக் தொன் உப்பு ஆகிய பொருள்கள் விநியோகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மரக்கறி எண்ணெய் ஒரு லீற்றர் 215 ரூபாவாகவும் சன்லைட் ஒன்று 28 ரூபாவாகவும் உப்பு ஒரு கிலோ 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பொருள்களுக்குரிய வழங்கல் கட்டளைகளை இன்று காலை 9 மணி தொடக்கம் புனர்வாழ்வு செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் - என்றும் திட்டப்பணிப்பாளர் தெரிவித்தார். (அ-1)

## மூதூரில் இளைஞன் சுட்டுக்கொலை

திருகோணமலை, செப். 8

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், மணல்சேனை என்னும் இடத்தில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு இளைஞன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சிவநாயகம் பிரதீப்குமார் (வயது 24) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் வீட்டில் இருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அவரை வெளியே அழைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-151)

# வடமராட்சியில் பெருமெடுப்பில் நேற்றுத் தேடுதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 8

வடமராட்சியில் பெரும் எடுப்பில் பல கிராமங்களில் நேற்றுத் தேடுதல் இடம்பெற்றது.

புலோலி - மத்தி, கிழக்கு, மேற்கு மற்றும் தம்பசிட்டி, வியாபாரி மூலை ஆகிய கிராமங்களை நேற்று அதிகாலை 5.30 மணிக்கு படையினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைத்தனர்.

அப்பகுதியில் உள்ள சகல வீடுகளுக்கும் சென்ற படையினர் அங்கு சோதனைகளை நடத்தினர். அடையாள அட்டைகளையும் பெற் றுக்கொண்ட படையினர் சகலரையும் புற்றளைப் பிள்ளையார் கோயில், கதிர வேற்பிள்ளை சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் கூடுமாறு தெரிவித்தனர்.

அங்கு முகமூடி முன் அவர்கள் நிறுத்தப்பட்டு, கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

புலோலி மேற்கைச் சேர்ந்த இரு இளைஞர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்ட படையினர் அவர்களை முகாமுக்கு வருமாறு தெரிவித்தனர். (அ-1-15-78)

## நாளை

ஆவணி - 23 ஞாயிற்றுக்கிழமை
09.09.2007
திதி : திரயோதசி பி.ப. 05.31
நட்சத்திரம் : ஆயிலியம்
மு.இ. 09.07
சுபநேரம் 09.04 - 10.34
ராகுகாலம் 04.34 - 06.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அப்பாவித்தனத்தை பலவீனமாகக் கருதாதீர்! எம்.பிக்களுக்கு சபாநாயகர் சபையில் சாட்டையடி

## நாடாளுமன்றத்தில் பயங்கரவாதத்தை அனுமதிக்கமாட்டார் என்றும் அறிவிப்பு

கொழும்பு, செப். 8

என்னுடைய அப்பாவித்தனத்தை யாரும் பலவீனமாக எடைபோட்டுவிடக்கூடாது. நான் சபாநாயகராக இருப்பதில் உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் உடனடியாக இராஜினாமா செய்யவும் தயார். அதனையும் நேரடியாகக் கூறிவிடுங்கள். நாடாளுமன்றத்தில் பயங்கரவாதத்திற்கு இடமளிக்க முடியாது. நான் வழங்கிய தீர்ப்பில் ஏந்த மாற்றமும் செய்ய முடியாது. சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை நிறைவேற்றப்பட்டமை தான்''

-இவ்வாறு சபாநாயகர் டபிள்யூ.ஜே. எம்.லொக்குபண்டார நேற்று நாடாளுமன்றத்தில் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடிய போது சபாநாயகர் லொக்குபண்டார, நேற்று முன்தினம் சபையில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பாகத் தாம் வேதனைப்படுகிறார் எனக் கூறினார்.

செவிமடுக்க முடியாத வார்த்தைப் பிரயோகங்கள், அடாவடித்தனங்கள் மூலம் ஒரே பயங்கரவாதம் போல இடம்பெற்றன.

கடவுள் கிருபையால் என்னுடைய உடம்பில் எவரும் கை வைக்கவில்லை. அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

எல்லோரும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தாங்கள் சண்டை பிடிக்கின்றனர் எனக் கூறுகின்றனர். ஒன்றை நீங்கள் கவனதில் கொள்ளவேண்டும். சபையின் கௌரவத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்க சபையின் இருபக்கத்தினருமே எனக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஜனநாயகத்தை கை, கால்களைப் பாவித்துப் பாதுகாக்க முடியாது.

நானும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தான். என்றாலும் நான் எனது மனச்சாட்சியின்படியே செயற்படுகின்றேன். நான் சபாநாயகராக இருந்து செயற்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால் நேரடியாக அறிவித்துவிடுங்கள். நான் எந்தச் சமயத்திலும் இராஜினாமாச் செய்யத் தயாராக இருக்கின்றேன். எனது அப்பாவித்தனத்தை எவரும் பலவீனமாக எடைபோட்டுவிடக் கூடாது- என்று சபாநாயகர் லொக்குபண்டார மிகவும் வேதனையுடன் தெரிவித்தார்.

சபாநாயகரைத் தொடர்ந்து எதிர்க்கட்சிக் கொறடா மைக்கல் பெரேரா, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. உறுப்பினர்கள் அனுரகுமார திசநாயக்கா, சுனில் ஹந்துன் ஹெற்றி ஆகியோர் -

நேற்று முன்தினம் ஐந்து சட்டத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டதாக கூறுவதை ஏற்கமுடியாது என்று வாதாடினர்.

ஆளும்கட்சிக் கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அவ்வப்போது குறுக்கீடு செய்து சட்டத்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டதாக வாதிட்டார். இந்த இடத்தில் சபையில மீண்டும் கலகலப்பு ஏற்பட்டது. சூடான வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

மாறி மாறி சர்ச்சைகள் தொடர்ந்தன.

இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு ஆலோசனையை முன்வைத்தார்.

நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்ட ஐந்து சட்ட வரைவுகளும் முறைப்படி அங்கீகரிக்கப்படவில்லை. அவை நிறைவேற்றப்பட்டன என ஏற்கமுடியாது. எனவே, கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக்கூட்டி இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்து



அதன் பின்னர் ஒரு முடிவை எடுக்கலாம் என்று ரணில் கூறினார்.

இதனை சபாநாயகர் நிராகரித்துவிட்டார்.

இந்த ஐந்து சட்டமூலங்களும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. மீண்டும் வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. எனது தீர்ப்பை மாற்ற முடியாது என சபாநாயகர் கூறிவிட்டார். (சி)

## வர்த்தக நிறுவனங்கள் திங்கள் மூடப்படும்

யாழ்ப்பாணம், செப். 8

'நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவில் வர்த்தக ஊழியர்கள் பங்கு பற்ற வசதியாக நாளைமறுதினம் திங்கட்கிழமை வர்த்தக நிறுவனங்களை மூடிவிடுமுறை வழங்குமாறு யாழ்ப்பா ணம் வணிகர் கழகம் அறிவுறுத்தி உள் ளது. (அ-1)

## சிங்கள மாவட்டம் எதனையேதும் உருவாக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை

### ஊடகத்துறை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, செப். 8

திருகோணமலைக்கும் முல்லைத்தீவுக்கும் இடடையில் புதிய சிங்கள மாவட்டம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டில் உண்மை எதுவும் இல்லை.

ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிங்கள மாவட்டம் ஒன்றை உருவாக்க முயற்சி நடப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் புதன்னறு நாடாளுமன்றத்தில் அதிர்ச்சித் தகவல் வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் அமைச்சர் பிரியதர்சன யாப்பா அதனை மறுத்தார்.

அரசுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இக்கருத்து வெளியாகியுள்ளது. இது தொடர்பாக அரசின் கண்டனத்தைத் தெரிவிக்கின்றேன்.

எந்தவொரு சிங்கள மாவட்டத்தையும் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை - என்றார் அவர். (அ-1)

## 13ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் இருந்து உறுதியான பதில் கிடைக்கவில்லை.

ஏற்கனவே அமைச்சரவையும் சம்பள நிர்ணயக் குழுவும் தந்த உறுதிமொழிகளை நிறைவேற்றவில்லை. அதன் காரணமாக இப்போது அவர்கள் தரும் உறுதிமொழியை ஏற்கமுடியாது.

சம்பள உயர்வு தொடர்பாக சுற்றுநிருபம் மூலமான அறிவிப்பு வெளியிடப்படுமானால், அது தொடர்பாக ஆராய்ந்து போராட்டத்தை கைவிடலாம் - என்று சொன்னார். (அ-1-11)

## முன்னாள் கான்ஸ்டபிள் மன்னாரில் நேற்று மாலை சுட்டுக்கொலை

மன்னார், செப். 8

மன்னார், எழுத்தூரில் நேற்று மாலை 6.15 மணியளவில் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த யோகா என அழைக்கப்படும் இராசையா மோகன் (வயது 39) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இவர் மன்னாரில் திருமணம் செய்து வாழ்ந்துவந்தார்.

பொலிஸ் கான்ஸ்டபிளாக கடமையாற்றிய இவர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றி வியாபாரம் செய்து வந்தார்.

வழமைபோல் நேற்று மண் ஏற்றிவந்து, தமது வீட்டுக்கு முன்பாகவுள்ள வளவில் அதனை இறக்கிக் கொண்டிருந்தவேளை, சூட்டுக்கு இலக்காகி மரணமானார் - எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-5)

## அழுக்க வெடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலங்களைப் பார்வையிட்டதுடன் சடலங்களை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குண்டு வெடிப்பில் சிக்குண்ட டிராக்டர் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (சி)

## பட்டினியோடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த முதலாம் திகதி சிலாவத்துறையில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக முள்ளிக்குளத்தில் 155 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் வெளியேற முடியாமல் அங்கு சிக்குண்டு இருந்தமை தெரிந்ததே.

12 மைல்கள் நடந்து வந்து நேற்று சிலாவத்துறையை வந்தடைந்த இவர்கள் அங்கிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் அவர்கள் அங்கிருந்து வாகனங்களில் முருங்கன் மகா வித்தியாலயத்திற்கு கூட்டி வரப்பட்டுத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் ஆயர் அதிவண ராஜப்பு ஜோசப், மன்னார் அரச அதிபர் ஏ. நிக்கலஸ் பிள்ளை, நானாட்டான் பிரதேச செயலர் எம். திருஞானசுந்தரம் ஆகியோர் தள்ளாடி மற்றும் உயிலங்குளம் படை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பலனாக இந்த மக்கள் மீட்கப்பட்டனர்.

முள்ளிக்குளம் பகுதியில் வசிப்பவர்கள் அங்கிருந்து சிலாவத்துறைக்கு கால்நடையாக வருவதற்கு படையினர் அனுமதி வழங்கினர். நேற்றுமாலை சிலாவத்துறையை வந்தடைந்தனர்.

அவர்கள் அங்கிருந்து ஆறு பஸ்களில் முருங்கன் மத்திய மகா வித்தியாலயத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

1990ஆம் ஆண்டு முள்ளிக்குளம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், மன்னாரில் வாழ்ந்து வந்தனர். அவர்களில் சுமார் 155 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 2002 யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபின் முள்ளிக்குளத்துக்குச்சென்று மீளக்குடியமர்ந்திருந்தனர்.

கடலோடு அண்டியுள்ள முள்ளிக்குளம் கிராமம் மன்னார் - புத்தளம் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. (அ-1)

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பும் முயற்சிக்கும் தமிழகத்தில் அரசியல் தலைவர்களான வைகோ, டாக்டர் ராமதாஸ், திருமாவளவன் ஆகியோர் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

படகுமூலம் உணவு அனுப்பும் முயற்சி எதிர்வரும் 12ஆம் திகதி மேற்கொள்ளப்பட இருப்பது தெரிந்ததே. (அ-1)

## பரந்த அடிப்படை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஜனா திபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கொண்ட இலங்கை அரசின் உயர் குழு புதுடில்லியில் நடத்திய பேச்சுகளின் போதே இதற்கான உறுதி மொழி தெரிவிக்கப்பட்டதாகக் கூறப் பட்டது.

ஜாதிக ஹெல உறுமய, ஜே. வி. பி. போன்ற தென்னிலங்கை யின் தீவிரப் போக்குக் கட்சிகள் எதிர்த்தாலும் அவற்றையும் மீறி, இனப்பிரச்சினைக்கு பரந்த அடிப்படையிலான தீர்வு யோசனை ஒன்றை அரசுத் தரப்பு முன்வைக்கும் என்ற அளவில் உறுதி அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

வடக்கு - கிழகக்கு இணைப்பு விடயத்தில் இந்தியாவின் சிரத் தையைப் புறக்கணித்து, கொழும்பு உதாசீனமாக நடந்து வருகின்றமை குறித்து புதுடில்லியின் அதிருப்தி, இலங்கைத் தூதுக் குழுவுக்கு எடுத்துரைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இவ்விடயத்தில் எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்தும், சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்புகளை ஒன்றிணைத்து ஆக்கபூர்வமாகச் செயற்படுவது சம்பந்தமாகவும், நேர அட்டவணை வகுத்து விடயங்களை ஒப்பேற்றுவது குறித்தும் கூட ஆராயுப்பட்டதாம்.

### இரு நாட்டு முப்படைகளும் கூட்டுச் செயற்பாடு

இரு நாடுகளுக்கும் இடையில் இராணுவத்தோடு இராணுவமும், கடற்படையுடன் கடற்படையும், விமானப் படையுடன் விமானப்படையும் அவ்வப்போது கலந்தாலோசித்து கூட்டுச்செயற்பாடு மேற்கொள்வது பற்றிய யோசனையும் கவனத்தில் எடுக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டது.

இதேசமயம், இலங்கை விடயத்தில் சீனா அளவுக்கு அதிகமாக உள்நுழைய இடமளித்திருப்பது பற்றிய இந்தியாவின் கவலையும் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

ஏற்கனவே கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக சாலை நிர்மாணப் பணி சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுக நிர்மாணப் பணிக்கு திறந்த கேள்விப்பத்திர முறையைத் தவிர்த்து, சீனாவை விசேடமாக உள் அழைக்க இலங்கை திட்டமிட்டிருக்கின்றது என்ற சாரப்பட இந்தியத் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டதாகவும், ஆனால் அப்படித் தீர்மானம் ஏதும் இல்லை என்று இலங்கைத் தரப்பில் திட்டவட்டமாகப் பதிலும் விளக்கமும் அளிக்கப்பட்டதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### மகிந்தா இந்தியா செல்வார்

இம்மாதம் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து திரும்பிய பின்னர் நவம்பர் மாதமளவில் இந்தியா செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவரது இந்திய விஜயத்திற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான யோசனையை வெளியிடுவதில் ஆக்கபூர்வமான படிநிலைகளைத் தாண்டியிருப்பதை கொழும்பு செயலில் காட்டியிருக்க வேண்டும். - என்று தான் எதிர்பார்ப்பதாக புதுடில்லி இந்தச் சந்திப்பின் போது கொழும்புக்கு கோடிட்டுக்காட்டியதாம்.

யுத்தத் தீர்வு முனைப்பை விடுத்து அமைதி வழித் தீர்வுக்கான ஆக்கபூர்வமான செயற்பாட்டை நெறிப்படுத்தும் படியும் புதுடில்லி இச்சந்திப்புகளின்போது வற்புறுத்தியது.

- இப்படி விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.(சி)


PC ஹொட்லைன் காட் தேவை. விற்க விரும்புவோர் அழைக்கவும் 0776845789, 021 4590630

**சிங்கள வகுப்பு**
பேச, எழுத, வாசிக்க
புதிய பிரிவு ஆரம்பம்
08.09.2007
காலை 11 - 12
மாலை 2 - 3
(உங்கள் வசதிக்கேற்ப வேறு நாள்கள் மாற்றிக் கொள்ளலாம்)
By. அ. ஸ்ரீ ரஞ்சன்
41, றக்கா லேன், சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(சிறுவர் உள சமூகத்திட்டம் (சாந்திகம்) நேர் முன்பாக)
தொ.பே. 0777 033729.

**வெளிவந்துவிட்டது**
2008 - தரம் 5 (தற்போது தரம் 4)
புலமைப்பரிசில் பரீட்சைக்கான... வெற்றித்தேர்வு
திருமலை கணேசலிங்கம்
அவர்களின் வெற்றித் தேர்வு 1, 2, 3, 4, 5, .... வெளிவந்துவிட்டது.
விடையுடன் இலவசமான கையேடு,
இன்றே சகல புத்தக சாலைகளிலும் பெறலாம்.
தொடர்புகளுக்கு:
021 222 9016, 021 226 3815.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org